பொது நிர்வாக சுற்றறிக்கை இல: 01/94

பொதுநிர்வாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு- 07
03.01.1994

சகல அமைச்சு செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாகாண சபைகளின் கீழ்வரும் அரச நிறுவனங்களின் தலைவர்கள்,
நியதிச் சபைகளினதும், கூட்டுத்தாபனங்களினதும்,
அரச பிரத்தியேக கம்பனிகளினதும் தலைவர்கள்.

## அரச கூட்டுத்தாபன ஊழியர்களின் தொகைமதிப்பு -1994.

அரச கூட்டுத்தாபன ஊழியர்களின் அடுத்த தொகைமதிப்பை 1994ம் ஆண்டு மார்ச் மாதம் நடாத்துவதற்கு தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதே விதமான தொகைமதிப்புகள் 1968,1972,1976 ஆண்டுகளில் பொதுநிர்வாக அமைச்சின் உதவியுடன் தொகைமதிப்புப் புள்ளிவிபரத்திணைக்களத்தினால் நடாத்தப்பட்டது. அத்துடன் 1980ம், 1985ம், 1990ம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட தொகைமதிப்புகள் தொகைமதிப்பு புள்ளிவிபரத்திணைக்களத்தினால் நடாத்தப்பட்டன. இத்தொகைமதிப்பு, இவ்விதமான தொகைமதிப்பு தொடர்களின் ஏழாவதாகும்.

02. இத்தொகைமதிப்பு அமைச்சுகள், திணைக்களங்கள், நியதிச்சபைகள், கூட்டுத்தாபனங்கள், மத்திய அரசாங்கத்தின் கீழ் வரும் அரச பிரத்தியேக கம்பனிகள் மாகாண சபையின் கீழ் வரும் அரச பிரத்தியேக கம்பனிகள் மாகாண சபையின் கீழ்வரும் சகல நிறுவனங்கள் (உள்ளூராட்சிகள், அமைப்புகள், உட்பட ) என்பவற்றிலுள்ள சகல (நிரந்தர, தற்காலிக, அமைய, ஓய்வு பெற்று மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்ட) ஊழியர்களையும் அடக்கும். ஊழியர்கள் கேள்விக்கொத்து ஒன்றை தாமாகவே நிரப்புவதன் மூலம் தேவைப்படும் தரவுகளை கொடுக்க வேண்டும்.

03. கேள்விக் கொத்துகள் ஊழியர்களுக்கு நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அதிகாரி மூலம் அமைச்சு/மாகாண சபையூடாக தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்படும்.

முக்கியமாக:

(1) உங்கள் நிறுவனத்தில் வேலைசெய்யும் சகல ஊழியர்களும் கேள்விக் கொத்தை பெற்றுக் கொள்ளுதல்
(2) நிரப்பப்பட்ட கேள்விக் கொத்துகள் சகல ஊழியர்களிடமிருந்தும் மீளப் பெற்றுக் கொள்ளுதல்.
(3) பிழையின்மை, பூரணத்துவம், சகல பகுதிகளினதும் உள்ளடக்கம்.

(4) பூர்த்தி செய்யப்பட்ட கேள்விக் கொத்துக்கள் 1994ம் ஆண்டு மார்ச் மாதம் 15ம் திகதிக்கு முன் தொகைமதிப்பு புள்ளிவிபர திணைக்களத்துக்கு அனுப்புதல், போன்றவை யாவும் உறுதி செய்யப்படல் வேண்டும்.

04. இத்தொகைமதிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சேகரிக்கப்படும் தரவுகள் அரசாங்கத்திற்கும் நாட்டுக்கும் மிகவும் உபயோகப்படுத்தப்படும். ஆகவே மேற் குறிப்பிட்ட தொகைமதிப்பு மூலம் உங்கள் நிறுவனத்தில் வேலை செய்யும் சகல ஊழியர்களினதும் முழு விபரங்களையும் சேகரிப்பதை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்குமாறு தங்களை வேண்டுகிறேன்.

ஒப்பம்; வை. வி. புஸ்ஸதெனியா
செயலாளர்
பொதுநிர்வாக அமைச்சு

பிரதி 1. பணிப்பாளர், தொகைமதிப்புபுள்ளிவிபரத்திணைக்களம்

2. செயலாளர், கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு.